## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் (''கம்பனி'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டததின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது இந்த அறிக்கையின் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிநிலைமைக்கூற்று, விரிவான வருமான அறிக்கை, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் உள்ள பொருண்மையான விடயங்களை மாற்று வழிகள் மூலம் என்னால் உறுதிப்படுத்தவோ அல்லது சான்றுறுதிப்படுத்தவோ முடியாதுள்ளது.

இந்த விடயங்களின் விளைவாக, அறிவிக்கப்பட்ட அல்லது அறிவிக்கப்படாத தொகைகளுக்கும், நிதிநிலைமைக்கூற்று, விரிவான வருமான அறிக்கை, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றிற்கும் ஏதேனும் சரிசெய்தல்கள் தேவைப்பட்டனவா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில், நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது ஒரு கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது பொறுப்பாகும். இருப்பினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள காரணங்களுக்காக, இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குத் தேவையான போதுமான பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற முடியவில்லை.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ஆரம்ப மீதி கணக்கீட்டு முறைமையில் உள்ளடக்குவதற்கு பயன் படுத்தப்பட்ட "ஆரம்ப மீதி உரித்துக் கணக்கில்" (Opening balance equity) ரூபா 3.02 மில்லியன் வேறுபாடு காணப்பட்டமையால் அந்த வேறுபாடை வெளிப்படுத்தாமல் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களுக்காக பயன்படுத்தப்பட்ட 2018 ஆம் ஆண்டின் பரீட்சை மீதியில் Opening Balance Equity கணக்கு பூச்சியமாக இருந்தமையும் அதில் ரூபா 6.70 மில்லியன் மீதி காணப்பட்டதுடன் அந்த மீதி எந்த ஒரு கணக்கிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை. இதனிடையே இனங்காணக் கூடியதாக இருந்த மீதி சீராக்கங்களின் பின்னர் எஞ்சியிருந்த இந்த ரூபா 3.02 மில்லியன் அளவு நிறுவத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் சீராக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | உரிமை மூலதனக் கணக்கின் ஆரம்ப மீதியில் மாற்றங்கள் சரியாக இனங்கண்டு சீராக்கப்படல் வேண்டும். |

**1.5.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் ரூபா 18.91 மில்லியன் முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான நிதி அறிக்கையிடல் நியமத்தின் 10.23 ஆம் பந்திக்கு இணங்க தவறின் தன்மை, நிதிக் கூற்றுக்களில் ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களின் குறிப்பு நீண்டதாக இருந்தமையால் கணக்கீட்டு முறைமையில் சீராக்கங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் எதிர்வரும் கணக்குகள் தயாரிக்கும் போது சகல நிதிக் கூற்றுக்களிலும் வரிசை விடயங்களுக்காகவும் சரி செய்யப்பட்ட பெறுமதி, ஆரம்ப மீதி மாற்றங்கள் போன்ற வகையில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க தேவையான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியால் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 1.02 மில்லியன் கணனி மென்பொருள் முறைமை முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்த போதும் சிறய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான நிதி அறிக்கையிடல் நியமத்தின் பந்தி இலக்கம் 18.24 இன் பிரகாரம் பெறுமானத் தேய்வு முறைமை மற்றும் பயன் தரு ஆயட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு பந்தி இலக்கம் 10.15 முதல் 10.18 இன் பிரகாரம் கணக்கீடு செய்ய வேண்டி இருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணனி மென்பொருள் முறைமையில் கிரயம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளதுடன் இழிவுப் பெறுமதி காணப்பட வில்லை. அதனால் பயன் தரு ஆயட் காலம் மீளாய்வு செய்தல் பிரச்சனைக்கு உரியதாக இருந்தது. | பயன்தரு ஆயுட் காலத்தை மீளாய்வு செய்து நியமத்தின் பிரகாரம் பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட போதும் கம்பனியால் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்ற ரூபா 42.72 மில்லியன் கிரயமான | தற்போது முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்படாது காணப்படுகின்ற சொத்துக்களின் பயன் தரு | நியமத்தின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை பயன்தரு பொருளியல் |

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள், தளபாடப் பொருட்களின் பயன் தரு ஆயட் காலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான நிதி அறிக்கையிடல் நியமத்தின் பந்தி இலக்கம் 17.19 இன் பிரகாரம் திருத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | ஆயுட் காலம் மதிப்பீடு செய்ய வேண்டி இருந்த போதிலும் விரிவான நிலையான சொத்துப் பதிவேட்டில் காணப்படாமையினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு முடியாது இருந்தது. | ஆயட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தகவல் தொழில்நுட்ப முகாமையாளரின் 2019 செப்தெம்பர் 04 ஆந் திகதிய கடிதத்தின் படி கணனி மென்பொருள் முறைமையில் தரவுகள் அழிவடைந்து இருந்தமையால் மீளாய்வாண்டின் காசேட்டின் ஆரம்ப மீதி மற்றும் இறுதி மீதிகளில் சரியான தன்மையினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வில்லை. அவ்வாறு கம்பனியால் பேணிச் செல்லப்பட்டிருந்த 11 வங்கிக் கணக்குகளுக்கு உரிய மாதாந்த வங்கி இணக்க கூற்று சரியாக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2018 திசெம்பர் 11 இல் காணப்பட்ட மீதி 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது ஆரம்ப மீதியாக கொண்டு வரப்பட்டதுடன் அந்த மீதியைப் பயன்படுத்தி வங்கி இணக்கக் கூற்று தயாரித்தல் பிரச்சனைக்கு உரியதாக இருந்தமையால் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் போது மாத்திரம் 2019 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட வங்கி மீதியைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட 07 வங்கிக் கணக்குகளுக்காக கணக்கீட்டு முறைமையின் மூலம் மாதாந்த வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டதுடன் அந்த சகல ஆவணங்களும் 2025 செப்தெம்பர் 15 ஆந் திகதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | காசேடு மற்றும் வங்கி இணக்கக் கூற்று சரியாகவும் கால ரீதயிலும் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தேசத்தை கட்டியெழுப்பும் வரி பெறுமதியான ரூபா 8.25 மில்லியன் செலவினமாகக் கணக்கீடு செய்யப்படாமல் மொத்த விற்பனை | இந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி நேரடியாக விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் தாக்கமளித்திருந்தமையால் | எதிர்காலத்தில் வருமானம் மற்றும் செலவினங்கள் தனித் தனியாக கணக்கீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தில் கழிக்கப்பட்டு விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக விற்பனை வருமானம் மற்றும் செலவினம் அப்பெறுமதியால் குறை கணிப்பீட்டுக்கு உட்பட்டு இருந்தது. | நிதிக் கூற்றுக்களில் விற்பனை வருமானத்தில் சீராக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பணிக்கொடை மிகை அல்லது பற்றாக்குறை ஒதுக்கீடுகளை சீராக்கும் போது, கடந்த ஆண்டில் பணிக் கொடை கொடுப்பனவுகள் ரூபா 2.24 மில்லியனுக்குப் பதிலாக 0.46 மில்லியன் சீராக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1.78 மில்லியன் பற்றாக்குறை ஏற்பட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டின் பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 4.87 மில்லியனுக்கு பதிலாக ஊழியர்கள் சேவையில் இருந்து விலகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களுக்காக ரூபா 0.95 மில்லியனை உள்ளடக்கி ரூபா 3.09 மில்லியன் மாத்திரம் ஒதுக்கப்பட்டமையால் விரிவான வருமானக் கூற்றில் ரூபா 1.78 மில்லியன் குறை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டின் போது பணமாக செலுத்தப்பட்ட ரூபா 1.79 மில்லியன் தொகை வருட இறுதியின் போது பணிக்கொடை குறை ஒதுக்கீட்டை சீராக்கும் போது கைவிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>2019 ஆம் ஆண்டின் போது பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 2.73 மில்லியன் தொகை ஆண்டின் இறுதியின் போது பணிக் கொடை குறை ஒதுக்கீட்டை சீராக்கும் போது கைவிடப்பட்டதுடன் அது தொடர்பாக 2020 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் தயாரிக்கும் போது கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பணிக்கொடை ஒதுக்கீடுகளை சரியாக குறிப்பிடுவதற்கும், உரிய சீராக்கங்களை சரியாக மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியால் இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட கடன் தொகையில் ரூபா 16.17 மில்லியன் வட்டி, நிதிச் செலவினத்தின் கீழ் இனங்காணப்படாமல் நிர்வாக செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் நிதி செலவினங்களில் கீழ் இனங்காணப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எதிர் காலத்தில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அந்த அந்த செலவினங்களுக்கு உரிய செலவினத் தொகுதியின் கீழ் வகைப்படுத்தி காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (உ) | கம்பனியால் மகாவலி அதிகார சபையின் ஐம்பது வருட குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த அல்பிட்டிய 01 றூட் காணிக்காக 1997 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்துவதற்கு காணப்பட்ட ரூபா 1.27 மில்லியன் நிலுவை வாடகை மற்றும் தண்டப்பணம் இதுவரை செலுத்தப்படாது இருந்த போதும் இந்த தொகையை செலுத்த வேண்டியதாக கணக்கீடு செய்வதற்கு அல்லது குறிப்புக்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வாடகை செலுத்துவதற்கும் செலுத்த வேண்டிய வாடகை தொடர்பாக உரிய பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது கம்பனியின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட கூட்டு மொத்தமான ரூபா 102.56 மில்லியன் வருமானம், கடன் பட்டோர் பெறுவனவுகள் மற்றும் முற்பண பெறுவனவுகள் போன்றவாறு இனங்காணப்படாமல் பிழையாக செலுத்த வேண்டிய செலவினத்தின் கீழ் நேர் வைப்புக்களின் பெயரில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1.61 மில்லியன் ஆன இனங்காணப்படாத வங்கி வைப்புக்கள் 2018 ஆம் ஆண்டின் போது நிறுத்தி வைத்த இலாபத்தில் பிழையாக சீராக்கப்பட்டிருந்ததுடன் இதுவரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இது முன்னைய ஆண்டில் நேர் வைப்புக்களாக இனங்காணப்பட்ட ரூபா 102.56 மில்லியன் மீதி கடன் பட்டோர் பெறுவனவு, முற்பணப் பெறுவனவு போன்றவாறு இனங்கண்ட பின்னர் மீதி உறுதிப்படுத்தும் அடிப்படையில் எதிர் வரும் கணக்கு செயற்பாடுகளின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ரூபா 1.61 மில்லியன் மீதியின் சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொண்டு இதனை சீராக்குவதற்குத் தேவையான எதிர் வரும் கணக்குகளில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நேர் வைப்புக்கள் மற்றும் இனங்காணப்படாத வங்கி வைப்புக்களாக காண்பிக்கப்பட்ட மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி (ரூபா மில்லியன்) | நேரொத்த அறிக்கை க ளின் பிரகாரம் பெறுமதி (ரூபா மில்லியன்) | வேறுபாடு (ரூபா மில்லியன்) | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | கடன் பட்டோர் | 315.15 | 314.08 | 1.07 | வரவு பொறுப்பு மீதியுடன் கணக்கொன்று காணப்பட்டமை அசாதாரணமாக இருந்தமையால் 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் பட்டோர் மீதியின் வேறுபாட்டை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | விற்பனை வருமானம் | 754.11 | 825.09 | 70.98 | பெறுமதி சேர் வரி அறிக்கை தயாரிக்கும் போது விற்பனை பெறுமதியில் excel பயன் படுத்தி தயாரிக்கப்பட்ட விற்பனை அறிக்கை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டதுடன் அதில் சில பெறுமதிகளில் வழுக்கள் காணப்பட்டதுடன் கணக்கீட்டு முறைமைக்கு சரியான விற்பனை பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் விற்பனை வருமானம் சரியானதாகும். எனினும் இந்த வழுக்கள் காணப்பட்டமை பெறுமதி சேர் வரி பூர்த்தி பெறுமதிக்காக எந்த ஒரு தாக்கமும் ஏற்படாது இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் விற்பனைப் பெறுமதி மாத்திரம் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. | வட் வரி அறிக்கை விற்பனையுடன் ஒப்பீடு செய்து வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக கம்பனியால் பெறப்பட்டிருந்த தேறிய நட்டம் ரூபா 156.35 மில்லியன் ஆக இருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் திரண்ட நட்டம் ரூபா 1,102.36 மில்லியன் ஆக இருந்தது. 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தேறிய இலாப விகிதம் 3.5 சதவீதம் முதல் 21 சதவீதம் வரையிலான மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் தேறிய சொத்துக்களும் ரூபா 1,105.49 மில்லியன் மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. மேலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி ரூபா 940.02 மில்லியன் ஆன கடன் குறித்துரைத்த பிரகாரம் மீள செலுத்தாமையின் காரணமாக கடனுக்காகப் பிணை வைக்கப்பட்ட கம்பனியின் ஆதனங்கள் சட்ட ரீதியாக கையேற்பதற்காக பல்வேறு தரப்பினர்களினால் உரித்து கோரப்பட்டிருந்தது. இந்த விடயங்களின் பிரகாரம் கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தின் முன்னாள் காணப்பட்ட பணிப்பாளர் சபையினால் முன்னர் காணப்பட்ட நிச்சயமற்ற நிலைமை தொடர்பாக மதிப்பிட்டு கலைப்பதற்கோ அல்லது சந்தை நடவடிக்கைகளை முடிவுறுத்தல் தொடர்பாகவோ தீர்மானம் எடுக்கப்படாது இருந்ததுடன் நிறுவனத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் பங்குகள் 100 சதவீதமும் பொதுத் திறைசேரிக்கு சொந்தமாகக் காணப்பட்டதுடன் பொதுத் திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பணிப்பாளர் ஒருவர் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவப் படுத்துகின்றார். | நிறுவனத்தின் தொடர்ச்சியாக செயற்படும் இயலுமை அல்லது நிச்சயமற்ற தன்மையை மதிப்பீடு செய்து அது தொடர்பாக வெளிப்படுத்த வேண்டி இருந்ததுடன் கம்பனியின் நட்டங்களுக்கான காரணம், நட்டம் ஏற்படுவதை தடுப்பதற்கு பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பான அறிக்கை ஒன்று பங்கு உரிமையாளர்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான நிதி அறிக்கையிடல் நியமத்தின் பந்தி இலக்கம் 3.8 மற்றும் 3.9 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது முகாமைத்துவத்தால் நிறுவனம் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் இயலுமை தொடர்பான மதிப்பீடு மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் அது தொடர்பாக நிச்சயமற்ற நிலமை காணப்படுமாயின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். எனினும் நிதிக் கூற்றுக்களுக்காக குறிப்பிடப்பட்டதுடன் தொடர்ச்சியாக | | |

இருப்பு தொடர்பான குறிப்பு இலக்கம் 1.8 இன் மூலம் நியமத்தின் தேவையின் பிரகாரம் தகவல்கள் வெளிப்படுத்தப்பட வில்லை.

மேலும் கம்பனியால் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் பங்கு உரிமையாளர்கள் அதிவிசேட பொதுக் கூட்டம் ஒன்றைக் கோரி கம்பனிக்கு ஏற்பதற்கு உள்ள நட்டங்களின் தன்மை மற்றும் அளவு மற்றும் நட்டங்களுக்கான காரணம் போன்ற நட்டங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு அல்லது நட்டத்தை மாற்றியமைப்பதற்காக பணிப்பாளர் சபையினால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்குமாயின் பணிப்பாளர் சபையில் அது தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று பங்கு உரிமையாளர்களுக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் அந்த தேவையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை.

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 122.21 | நிலையான சொத்துப் பதிவேடு, விரிவான பட்டோலை அல்லது விரிவான பொருள் மெய்மையாய்வு அறிக்கை | இந்த குறை கணிப்பீட்டுக்கு நிறுவனத்திற்குச் சொந்தமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விரிவான நிலையான சொத்துப் பதிவேடு காணப்பட்டமையாகும். 2023 திசெம்பர் 31 மற்றும் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்காக நிலையான சொத்துக்கள் உரிய பிரகாரம் கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த கணிப்பீட்டின் படி விரிவான நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று தயாரித்து அதை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துப் பதிவேட்டை விரைவாக தயாரித்து வருடாந்தம் பொருள் மெய்மையாய்வையும் மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு | 93.19 | | | |
| (இ) | விற்பனைக்கான இருப்புக்கள் | 45.84 | பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கை | இருப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் கிளைகள் மற்றும் 22 களஞ்சியங்களுக்காக தனித்தனியாக இருப்பு பேரேடு பேணிச் செல்லப்படுவதுடன் அந்த பேரேட்டை அடிப்படையாகக் கொண்டு 2019 திசெம்பர் 31 இல் | இருப்புப் பேரேட்டை பேணிச் செல்லல் மற்றும் இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகள் குறித்துரைத்த பிரகாரம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உள்ளவாறு காணப்பட்ட மீதி பெறுமதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 45.84 மில்லியன் ஆக கணக்கீட்டு முறைமையில் சீராக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு முதல் இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகள் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. | மேற்கொள்வதற்கும் அந்த அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பெற வேண்டிய முற்பணம். | 3.35 | முற்பண பதிவேடு மற்றும் உரிய மூல ஆவணங்கள் | இந்த ரூபா 3.35 மில்லியன் மீதி 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொண்டு வரப்படுகின்ற ஆரம்ப மீதியாக இருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்கு உரிய மூல ஆவணங்களை கண்டறிவதற்கு இதுவரை முடியாது இருந்தது. | முற்பண மீதிகள் மற்றும் பெறப்பட்டுள்ள பெறுமதிகளின் விபரங்கள் தொடர்பாக சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான துணை ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | 09 அரச நிறுவனங்களில் இருந்து பெறப்பட்டிருந்த கடன் மற்றும் முற்பணம் | 151.90 | நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மீளாய்வு செய்வதற்கு தேவையான கடன் உடன்படிக்கை, ஏனைய துணை ஆவணங்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் | தேசிய வீடமை அபிவிருத்தி அதிகார சபை, செவன நிதியம் மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் மூலம் வழங்கப்பட்டிருந்த முறையே ரூபா 7.50 மில்லியன், ரூபா 90.00 மில்லியன் மற்றும் ரூபா 51.40 மில்லியன் கடன் தொகைகள் தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல் கோரப்பட்டிருந்ததுடன் அவ்வாறான கடன் மீதி ஒன்று காணப்படாது இருந்ததாக உறுதிப்படுத்தல் கடிதம் இதுவரை தற்போது கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் உரிய முறைமைக்கு இணங்க 2020 ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தில் இருந்து பெறப்பட்டு இருந்த ரூபா 3 மில்லியன் கடன் தொகை தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல் கோரப்பட்டதுடன் அதற்காக இதுவரை உறுதிப்படுத்தல் கடிதம் கிடைத்திருக்கவில்லை. | கடன் உடன்படிக்கை, ஏனை துணை ஆவணங்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களைப் பெற்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஊ) | பிணைக்கு வைக்கப்பட்டுள்ள காணி | 40.86 | நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படாது இருந்த உரிய சீராக்கம் அல்லது வெளிப்படுத்தல்கள் | வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதி கம்பனியின் மூலம் பெறப்பட்டு இருந்த 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 40.86 மில்லியன் கடன் மீதியை தீர்த்து வைக்காமையின் அடிப்படையில் பிணைக்கு வைக்கப்பட்ட காணியின் உரித்து அவர்களினால் இதுவரையிலும் கையேற்கப்பட்டு இருக்க வில்லை. | கடன் தொகையை மீள செலுத்தி பிணைக்கு வைக்கப்பட்டுள்ள ஆதனத்தை விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காத பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | உரிமை மூலதனத்தின் கீழ் காணப்பிக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட ஒதுக்கம் (Restricted Reserve) | 16.11 | வரவு மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தேவையான விபரங்களை உள்ளடக்கிய மூல ஆவணங்கள், பட்டோலைகள், உரிய அங்கீகாரம் | இந்த ரூபா 16.11 மில்லியன் மீதி 2010 ஆண்டு முன்னிருந்து கொண்டு வரப்படுகின்ற முன்னர் காணப்பட்ட ஆரம்ப வரவு மற்றும் செலவு மீதிகள் சிலவற்றின் கூட்டு மொத்தமாக இருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்களை கண்டறிவதற்கு முடியாதுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் இவ்வாறான கணக்குகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான தகவல்களை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | செலுத்த வேண்டிய சம்பளம் | 3.18 | செலுத்த வேண்டிய சம்பளமாகக் காண்பிக்கப் பட்டுள்ள வரவு மீதிக்கு உள்ள கொடுப்பவுகள் எந்த உத்தியோகத்தருக்கு உரியது மற்றும் கொடுக்கல் வாங்கலின் தன்மையை இனங்காண்பதற்கு தேவையான ஆவணங்கள் | முன்னைய ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது பிழையாக நாட்குறிப்புக்கள் இடப்பட்டமையினால் இவ்வாறு அசாதாரணமாக செலுத்த வேண்டிய மீதி ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அசாதாரணமாக செலுத்த வேண்டிய மீதி ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபை ஆலோசனையின் படி அவ்வாறான அசாதாரணமாக ஏற்பட்டிருந்த தவறுக்களுக்காக பயன்படுத்தப்பட்ட நாட்குறிப்புக்கள் 22 கணக்காய்விற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் 2020 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்குவதற்கு ஆலோசனை பெறப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது செலவின மீதிகளை சரியாகக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் பிழையான மீதிகள் உறுதிப்படுத்தலின் பிரகாரம் சீராக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஐ) | கேள்வி காப்புறுதி | 7.38 | கேள்வி காப்புறுதி மீதியை உறுதிப்படுத்துதல் மற்றும் கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்தக் கூடிய மூல ஆவணங்கள் | இந்த ரூபா 7.38 மில்லியன் கேள்வி காப்புறுதி பெறுமதிக்கு உரிய கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்களைக் கண்டறிவதற்கு முடியாதுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சகல சொத்துக்களின் மீதிகளுக்கும் மூல ஆவணங்கள் மற்றும் விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | இனங்காணப்படாத கடன்கொடுத்தோர் மீதி | 160.86 | கடன் கொடுத்தோர் மீதியை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் | ஏற்றுக்கொள்கின்றோம். | கடன்கொடுத்தோர் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தி எதிர் காலத்தில் இனங்காணப்படாத பெயர் குறிப்பிடப்படாத கடன் கொடுத்தோர் மீதிகள் உள்ள சந்தர்ப்பங்களை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | இனங்காணப்படாத கடன்பட்டோர் மீதி | 147.66 | கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் | ஏற்றுக்கொள்கின்றோம். | எதிர்காலத்தில் இனங்காணப்படாத பெயர் குறிப்பிடப்படாக கடன்பட்டோர் மீதிகளுக்கு உரிய காரணங்களை வெளிப்படுத்த வேண்டி இருந்ததுடன் சான்றுறுதிப் படுத்த முடியுமான கடன் பட்டோர் மீதிகளை மாத்திரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு உரிய அம்பலாங்கோட்ட, தங்காலை, லுனுகம்விகர, திஸ்ஸ, வீரகெட்டியா | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | மீதியினை இனங்கண்டு நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கும், மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| எம்பிலிப்பிட்டி மற்றும் சூரியவெவ போன்ற கிளைக் களஞ்சியங்களில் இருந்து சூரிய பொக்குன வெபொக்காவ வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீட்டு உரிமையாளர்களுக்கு ரூபா 23.65 மில்லியன் பெறுமதியான கட்டிடப் பொருட்கள் எந்த ஒரு வரையும் இன்றி விநியோகிக்கப்பட்டதுடன் 2025 யூலை 31 ஆந் திகதி வரையும் இந்த கடன் மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. இந்த தொடர்பாக எந்த ஒரு மீதி உறுதிப்படுத்தலும் உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அல்லது மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் வீட்டு நலனாளிகளிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு கம்பனி முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கடிவில்லை. | | எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் பிற்போட்ட வருமான செலவினமாக 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து முன் கொண்டு வரப்படுகின்ற “ இழப்பீடு செலவுக்கு செலுத்துவதற்கான அரசாங்கத்தின் உதவிப் பெறுவனவு” ரூபா 38.30 மில்லியன் கணக்காய்வுத் திகதியான 2025 ஒக்தோபர் 03 ஆந் திகதி வரையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ரூபா 38.29 மில்லியன் மீதி 2010 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்து கொண்டு வரப்படுகின்ற ஆரம்ப மீதி ஒன்றாக இருந்ததுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்கு உரிய மூல ஆவணங்களைக் கண்டறிவதற்கு இதுவரை முடியாது இருந்தது. | கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய மூல ஆவணங்களை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் பொறுப்பில் பாதுகாப்பாக பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் உரிய கணக்குகளை தீர்த்து வைப்பதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீரமானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதி இலக்கம் பீஈடி 12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 7.4.1 ஆம் பந்தி | ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் வீதம் நடாத்த வேண்டியிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டிற்காக எந்த ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | | முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 8.3.3 (அ) பந்தி | மிகை ஊதியப் படி செலுத்துவதற்கு தகைமையினைப் பெற்றுக் கொள்வதற்காக கடந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் அந்த ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்கள் 1700 நாட்கள் தாமதம் ஆகி 2023 ஒக்தோபர் 27 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது 2018 ஆம் ஆண்டிற்குரிய மிகை ஊதியப் படி ரூபா 0.62 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மாத்திரம் மிகை ஊதியப் படிகளுக்கு உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |
| (iii) | 2003 யூன் 02 ஆம் திகதிய இலக்கம் பீஈடி 12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தி மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதி இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டியின் இணைப்பு I இன் (1) மற்றும் (2) ஆம் | கம்பனியின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக 03 வருடங்களுக்கு குறையாத காலத்திற்காக கூட்டிணைப்பு திட்டம் மற்றும் அதற்கு நேரொத்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து ஒவ்வொரு நிதி ஆண்டும் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் உரிய திட்டங்களுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற வேண்டி | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டங்களை தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பந்திகள் | இருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (iv) | 2003 யூன் 02 ஆம் திகதிய இலக்கம் பீஈடீ 12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தி மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதி இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டியின் இணைப்பு I இன் (3) ஆம் பந்தி | வருடாந்த பாதீட்டுடன் பாதீடு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டுடன் பாதீடு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | 2003 யூன் 02 ஆம் திகதிய இலக்கம் பீஈடீ 12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(உ) மற்றும் 9.3.1 ஆம் பந்திகள் மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதி இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகள் | கம்பனிக்கு தேவையான பதவியணியினர் மற்றும் ஆட்சேர்த்தல் நடைமுறையினை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியின் பதவியணியினர் மற்றும் ஆட்சேர்த்தல் நடைமுறையினை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆம் திகதிய இலக்கம் 05/2016 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.7 மற்றும் 3.27 ஆம் பந்திகள் | ஒவ்வொரு ஆண்டிற்கும் உரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை அடுத்து வரும் ஆண்டின் யூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்து அது தொடர்பாக யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் அரச நிதி பணிப்பாளருக்கும் அறிவிக்க வேண்டி இருந்த | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கை உரிய தரப்பினருக்கு அனுப்புதல் வேண்டும். |

போதிலும் மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 59.09 மில்லியன் ஆன செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டி எழுப்பும் வரி, வியாபாரப் புரள்வு வரி, பெறுமதிசேர் வரி மற்றும் பொருளாதார சேவைகள் கட்டணம் என்பவற்றைச் செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் கிடைக்க வேண்டிய பொருளாதார சேவை கட்டணம் ரூபா 3.87 மில்லியன் ஈடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம் | செலுத்த வேண்டிய வரிகளை உரிய பிரகாரம் வரிப் பிரமாணங்களின் பிரகாரம் செலுத்துவதற்கும், வரி சலுகையினைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 156.35 மில்லியன் நட்டமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுக்கு நேரொத்த நட்டம் ரூபா 167.21 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 10.86 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு விற்பனை வருமானம் உயர்வடைந்து சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின வருமானங்களின் முக்கிய பகுப்பாய்வு

2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் விற்பனை வருமானம் ரூபா 523.18 மில்லியன் அதிகரித்து இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 235 சதவீத அதிகரிப்பாகும். அவ்வாறே ரூபா 215.86 மில்லியன் ஆன விற்பனைக் கிரயம் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 623.02 மில்லியன் வரை அதிகரித்து இருந்ததுடன் அது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 189 சதவீத அதிகரிப்பாகும்.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

2018 ஆம் ஆண்டில் 1.02:1 ஆகக் காணப்பட்ட நடைமுறை விகிதம் 2019 ஆம் ஆண்டின் போது 0.76:1 வரை வீழ்ச்சி அடைந்து இருந்ததுடன் அது குறுகிய காலப் பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்காக போதியனவான நடைமுறைச் சொத்துக்கள் காணப்படாது இருந்தமைக்கான அளவுகோலாகும். மேலும் மொத்த இலாப விகிதம் 3 சதவீதம் முதல் 16

சதவீதம் வரை அதிகரித்து இருந்த போதிலும் தேறிய லாப விகிதம் 2018 ஆம் ஆண்டில் (75) சதவீதம் முதல் 2019 ஆம் ஆண்டில் (21) சதவீதம் ஆகவும் புரள்வு விகிதம் (101) சதவீதம் முதல் (85) சதவீதமாக மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்த இலாபத்தில் அதிகரிப்பு காண்பிக்கப்பட்ட போது செயற்பாட்டு செலவினங்கள் மற்றும் ஏனைய செலவினங்களின் காரணமாக நிறுவனம் தொடர்ச்சியாக நட்ட நிலைமையினை அடைந்திருந்தமையும் நிறுவனத்தின் திரவத் தன்மை மற்றும் நிதிச் செயலாற்றல் நல்ல நிலைமையில் காணப்படாது இருந்தமையும் அந்த நிலமை நிறுவனத்தின் நீடித்த நிலையான தன்மைக்கு பாதகமாக தாக்கமளித்து இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரச வியாபார கூட்டுத்தாபன சட்டத்தின் 2 ஆம் பிரிவின் i ஆம் உப பிரிவின் பிரகாரம் 1971 யூன் 17 ஆந் திகதிய இலக்கம் 14962/43 மற்றும் 1992 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திற்குச் சொந்தமான வரையறுத்த கம்பனி ஒன்றாக பதிவுசெய்திருக்கும் போது இனங்காணப்பட்ட நோக்கங்களுக்கு உள்நாட்டு மூலப் பொருட்களை உடைய கட்டிடப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு முயற்சித்தமை, கட்டிடப் பொருட்கள் உற்பத்தி காரர்களுக்கு உதவியினை வழங்குதல், கட்டிப் பொருட்களை இறக்குமதி செய்தல், கட்டிடங்களை நிர்மாணிக்கும் கைத்தொழிலுக்கு உரிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், அந்த உபகரணங்களை விற்பனை செய்தல் மற்றும் விநியோகித்தல் என்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டின் போது கம்பனிக்கு நடவடிக்கை எடுக்காது இருந்ததுடன் உள்நாட்டு முகவர்களிடம் இருந்தும் திறந்த சந்தையில் இருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட கட்டிடப் பொருட்கள் இலாப விகிதத்துடன் விற்பனை செய்தல் மாத்திரம் | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | கம்பனி கூட்டிணைக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 செப்தெம்பர் 27 ஆந் திகதி இலக்கம் அமப/07/1625/342/021 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் படி கொழும்பு 12 ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் ஆமைந்துள்ள கம்பனிக்குரிய காணியில் 100 பேர்ச்சினையுடைய நிலப் பகுதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கைளிப்பதற்காக ரூபா 50 மில்லியன் முற்பணத் தொகை ஒன்று 2008 பெப்ரவரி 22 ஆந் திகதி கம்பனியால் பெறப்பட்டிருந்தது. எனினும் 2012 மே 07 ஆம் திகதிய இலக்கம் 12/0446/540/005 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் மேற்கூறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டதுடன் பெறப்பட்ட முற்பணத் தொகையை மீள செலுத்த வேண்டி இருந்தது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்றில் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் இந்த செலுத்த வேண்டிய முற்பணத் தொகையைக் காண்பிக்கப்பட்ட போது கணக்காய்வுத் திகதியான 2025 ஒக்தோபர் 03 ஆந் திகதி வரையும் அந்த பணத்தை மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி ஒன்று காணப்பட்டதுடன் காணப்படுகின்ற நிதிக் கஷ்டங்களின் அடிப்படையில் செலுத்துவதற்கு முடியாது இருந்தது. இந்த மீதியை தீர்த்து வைத்தல் தொடர்பாக வரிசை அமைச்சின் தலைமையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் சில கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன் எதிர் காலத்தில் இரு தரப்பினரினதும் இனக்கப்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | வெளித் தரப்பினரிடம் இருந்து பெறப்பட்ட கடன் தொகையை இணக்கப்பாட்டிற்கு வருவதற்கோ அல்லது செலுத்தி தீர்த்து வைப்பதற்கோ தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாத்தறைக் கடை வீதி கிழக்கு வீதி 417/ஏ என்ற இடத்தில் அமைந்துள்ள கம்பனிக்குச் சொந்தமான கட்டிடத்தின் ஒரு பகுதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபையால் அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்படுவதுடன் கம்பனி அது தொடர்பாக எந்த ஒரு | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | ஆதனங்களில் அனுமதியற்ற குடியிருப்பாளரை அகற்றி உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கையும் எடுத்திருக்க வில்லை. அவ்வாறே 03 றூட் 35.6 பேர்ச் ஆன அநுராதபுத்தில் அமைந்துள்ள காணி ஒன்று வழக்கு நடவடிக்கைகள் 2013 யூலை 07 ஆந் திகதி முடிவடைந்த போது அனுமதியற்ற குடியிருப்பாளரை அகற்றி உரித்தை கையேற்பதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | கம்பனிக்கு உரிய மொறட்டுவை மற்றும் அநுராதபுரத்தில் அமைந்துள்ள 03 ஏக்கர் 01 றூட் 17 பேர்ச் காணிக்காக உரித்து உறுதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காது இருந்ததுடன் அநுராதபுரம், எம்பிலிப்பிட்டி, கண்டி, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் நுவரெலியாவில் அமைந்துள்ள 03 ஏக்கர் 03 றூட் 9.1 பேர்ச் அளவான 07 காணிகளுக்காக நில அளவையாளர் வரைபடமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | காணிக்காக நில அளவையாளர் திட்டத்தைத் தயாரிப்பதற்கும் உரித்து உறுதியைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலக்கம் 549/A பொறுபன, மொறட்டுவ இல் அமைந்துள்ள காணியின் உரித்து 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய இலக்கம் அமப/19/2192/122/076 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் கம்பனிக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் கம்பனியால் காணியின் உரித்திற்கு உரிய உரித்து உறுதி தயாரித்துக் கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2025 ஒக்தோபர் 03 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | காணியின் உரித்தைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய உரித்து உறுதியைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கம்பனிக்கு சொந்தமான இலக்கம் 541 சிறி சங்கராஜ மாவத்தை கொழும்பு 10 இல் அமைந்துள்ள காணியில் 100 பேர்ச் காணி அளவு | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | குறித்துரைத்த உரித்து உறதிக் கட்டணத்தை செலுத்தி காணியைக் கையேற்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 1998 நவம்பர் 09 ஆந் திகதி இலங்கை வங்கிக்கு ரூபா 70 மில்லியன் தொகையில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் கம்பனியால் 2018 ஒக்தோபர் 23 ஆம் திகதி இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட ரூபா 500 மில்லியன் கடன் தொகையில் மேற்கூறப்பட்ட விற்பனைக்கு உரிய ரூபா 70 மில்லியன் தொகை ஈடுசெய்யப்பட்டிருந்தது. இலங்கை வங்கி மேலே குறிப்பிடப்பட்ட தொகையை ஈடு செய்த பின்னர் வங்கியினால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்த உரித்து உறுதியின் பெறுமதிக்கு உரிய உரித்து உறுதிக் கட்டணமான ரூபா 5.38 மில்லியன் தொகை செலுத்தி மீண்டும் காணி கையேற்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2025 ஒக்தோபர் 03 ஆந் திகதி வரையிலும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் அது வரையில் செலுத்த வேண்டியதாகக் காணப்பட்ட உரித்து உறுதிக் கட்டணம் ரூபா 18.40 மில்லியன் வரை அதிகரித்து இருந்தது. | | முகாமைத்துவத்தால் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2013 ஆண்டின் போது இரத்தினபுரி மற்றும் காலியில் இரண்டு காணிக் கூறுகள் அடகு வைக்கப்பட்டு 08 மாதங்களில் செலுத்தி தீர்க்கும் அடிப்படையில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட ரூபா 75 மில்லியன் கடன் தொகையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சியிருந்த மீதி ரூபா 62.09 மில்லியன் மற்றும் நிலுவை வட்டி ரூபா 45.69 மில்லியன் என்பன கணக்காய்வுத் திகதியான 2025 ஒக்தோபர் 03 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | வெளித்தரப்பினரிடம் இருந்து பெறப்பட்ட கடன் தொகையை இனங்கிய பிரகாரம் செலுத்தித் தீர்த்தி வைப்பதற்கோ அல்லது அந்த தரப்பினருடன் எழுத்து மூலம் இணக்கப்பாட்டிற்கு வந்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்கு உரிய குன்குணியார் உக்குகுளம் கரை யாழ்ப்பாணத்தில் ஆமைந்துள்ள 01 றூட் 31.6 பேர்ச் காணி மற்றும் நுவரெலியா வம்பரகெல கட்டிடம் மற்றும் எம்பிலிபிட்டி யோதகம இல் 02 வீடுகள் என்பன 2017 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டு எடுக்கப்படாமல் பயனற்றுக் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதி இலக்கம் பீஈடீ 12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் படி வரைவு வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் 2025 ஆகஸ்ட் 05 ஆந் திகதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2020, 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு உரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை என்பன இதுவரை கணக்காய்வு சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வரைவு வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |